தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 9, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 ஏப்ரல் 22, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

தண்ணீரில் மலர்ந்திருக்கும் பூவினுடைய தண்டினது நீளம் தண்ணீர் உயரத்திற்கு இருக்கும். அதேபோல் ஒருவர் உள்ளத்தில் ஊக்கம் எந்த அளவு இருக்கின்றதோ, அந்த அளவிற்கு உயர்வு இருக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 283, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

283—

தரம் உயர்த்துதல்

***22540—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், ரெட்டியார்பட்டி 33/11 KV *துணை மின் நிலையத்தை 110/22* KV *துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், ரெட்டியார்பட்டியில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் 8 MVA திறனுள்ள மின் மாற்றியுடன் இயங்கி வருகிறது. ரெட்டியார்பட்டியில் தற்போதைய உச்ச மின் பளு 6 MVA மட்டுமே ஆகும். ஆகையால், 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை 110/11 கிலோ வோல்ட் திறனுடைய துணை மின் நிலையமாக மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லையென்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத்தின் விளை நிலமாய், விவேகத்தின் பிறப்பிடமாய், ஆற்றலின் இருப்பிடமாய், ஏழைகளின் ஏந்தலாய், இன்றைய தமிழகமாய், நாளைய பாரதமாய் விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட முசிறி ஒன்றியம், புத்தனாம்பட்டியில் 110/22 கிலோ வாட் துணை மின் நிலையம் சுமார் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரெட்டியார்பட்டியில் 33/11 கிலோ வாட் துணை மின் நிலையத்திலிருந்து பாதர்பேட்டை, சிறுநாவலூர் பஞ்சாயத்துகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள எரக்குடி, வடக்கிப்பட்டி பகுதிகளுக்கு துறையூர் மின் நிலையத்திலிருந்தும், நெட்டவெலாம்பட்டி, பச்சப்பெருமாள்பட்டி, கல்லாங்குத்து பகுதிகளுக்கு த.பேட்டை துணை மின் நிலையத்திலிருந்தும் மின்சாரம் வழங்கப்படுவதால், அடிக்கடி குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகிறது. எதிர்காலத் தேவையின்

2013 ஏப்ரல் 22]

அடிப்படையில் ரெட்டியார்பட்டியில் 110/22 கிலோ வாட் ஆகத் தரம் உயர்த்திக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச்செல்ல வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், உப்பிலியாபுரம் ஒன்றியம், ஒக்கரை கிருஷ்ணாபுரம் பகுதியில் அந்தப் பகுதி மக்களின் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, 33/11 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் ஒரு சிறு தவறு இருக்கிறது, அதைத் திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். 33/11 கிலோ வாட் என்பது கிடையாது. அது கிலோ வோல்ட். வாட்டுக்கும், வோல்ட்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதேபோல் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை வேண்டுமானால் 110/11 கிலோ வோல்ட் ஆக மாற்றலாம். ஆனால், உறுப்பினர் இப்போது 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தப்படுமா என்று கேட்டிருக்கிறீர்கள். அதற்கு நிருவாக ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் சாத்தியம் இல்லை. ஆகவே, வாய்ப்பிருந்தாலும்கூட, 110/11 ஆக மாற்ற வேண்டுமென்றுதான் கேட்டிருக்க வேண்டும். அதைப் பதிவு செய்யும்போது திருத்திக்கொள்ளலாம்.

முற்பகல் 10—05

தங்களுடைய துறையூர் தொகுதியைச் சேர்ந்த உப்பிலியாபுரம் ஒன்றியம், ரெட்டியார்பட்டியில் உள்ள 33/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையத்திலே, இப்பொழுது 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றி இயங்கி வருகிறது. அந்தப் பகுதியினுடைய உச்சபட்ச மின் பளுவே 6 எம்.வி.ஏ.தான். இப்போது அந்த மின் நிலையத்தில் தற்போதைக்கு போதுமான அளவுக்கு மின் பளுவைச் சமாளிக்கக் கூடிய அளவிற்கு அங்கே திறனுடைய மின் மாற்றிதான் இயங்கிவருகிறது. இருந்தாலும் கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை

[2013 ஏப்ரல் 22

ஏற்று, எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் ஏற்படுகின்ற மின் பளுவின் அளவைக் கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப கூடுதலாக 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியை அங்கே நிறுவுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை அந்தப் பகுதியினுடைய தேவை அறிந்து ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்பவும், அந்தப் பகுதியின் தேவைக்கேற்பவும், தமிழ்நாடு மின்சார வாரியம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்,

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத் தேவைக்கேற்ப அதிகரித்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்கலையிலே ஒரு துணை மின் நிலையம் இருக்கிறது. தக்கலை பகுதியிலிருந்து மின்சாரம் வழங்கும்போது, அதைச் சார்ந்த வில்லிகிரி பேரூராட்சி, நுள்ளிவிளை ஊராட்சி ஆளூர் பேருராட்சி, சுங்கான்கடை ஆகிய பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது. பயனாளிகள் அதைச் சரியாகப் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, தக்கலை பகுதியில் மின் திறனை அதிகரிப்பதற்கோ, இல்லையென்றால் வில்லிகிரிப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருவதற்கோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அந்தப் பகுதியின் பெயரென்ன?

2013 ஏப்ரல் 22]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்கலை.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்கலை பகுதியிலே மின் பளு அதிகமாக இருப்பதாகவும், அதற்குரிய மின் கட்டமைப்பு வசதிகள் போதுமான அளவிற்கு இல்லையென்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்கே உரிய ஆய்வுகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அந்தப் பகுதியினுடைய மின் பளுவைக் கருத்தில் கொண்டு, தேவையேற்படின் தேவையான அளவிற்கு மின் மாற்றிகளைத் தரம் உயர்த்தவும், தேவைப்பட்டால், அந்தத் துணை மின் நிலையத்தின் திறனை உயர்த்துவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுடைய எண்ணத்தை ஈடுசெய்கிற வகையில் விரைந்து செயலாற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேரையூர் பகுதியில் மின் பற்றாக்குறை இருப்பதை அறிந்து, அந்தப் பகுதி மக்கள் ஒரு துணை மின் நிலையம் வேண்டும் என்று கேட்டதற்கிணங்க, அதற்காக துறையின் சார்பில் ஆய்வு செய்து பேரையூர் அருகிலிருக்கிற சிலமலைப்பட்டியில் இடம் மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 12—வது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ளப்படும் என்று செய்தி வந்திருக்கிறது. இந்த ஆண்டே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை மின் நிலையத்தை அமைத்துத் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த பேரையூர் பகுதியிலே ஏற்பட்டிருக்கின்ற

மின் தேவையைக் கருத்தில்கொண்டு, அங்கே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய கருத்துரு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 12—வது ஐந்தாண்டுத் திட்டத்திலே அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இறுதி முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, 12—வது ஐந்தாண்டுத் திட்டம் என்று சொன்னால், அந்த ஐந்தாண்டுக் காலத்திலும் எந்த வருடத்தில் எப்படிச் செய்ய வேண்டும் என்பதில்லை. எந்தெந்த இடத்தில் எல்லாம் நிலம் உடனடியாகக் கிடைக்கிறதோ, அதை இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொள்ளலாம். அங்கே நிலம் கையகப்படுத்துகிற பணியைப் பொறுத்து, நிலம் சரியாகக் கிடைக்குமானால், உடனடியாக இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், அங்கே நிலத்தையும் கையகப்படுத்தி மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். உள்ளபடியே அப்படி இருந்தால், இந்த ஆண்டிலேயே துணை மின் நிலையம் துவங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 284, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

284—

பேருந்து நிலையம்

***4135—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS